DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 99 /2020 |
| Deposition of witness | : | PW-1 |
| Name | : | புஷ்பவள்ளி |
| Father's /Husband Name | : | கிருஷ்மூர்த்தி |
| Village | : | ஆண்டார்பந்தி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 52 |
| Occupation | : | இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 19th day September 2024.
Accused A1 to A4 present.

**முதல் விசாரணை:–**

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும், கடந்த 23.01.2019 ம் தேதி காலை 9.30 மணிக்கு எனது வீட்டு வாசலில் நின்றுகொண்டிருந்தேன், அப்போது சுசீலா என்னை பார்த்து குச்சிக்காரி மவனே என அசிங்கமாக திட்டினார், அப்போது அங்கு வந்த வேம்பு, தீபா மற்றும் ராஜா ஆகியோர் கட்டையால் என்னை தாக்கினார்கள். அதில் எனது நெற்றியில் இரத்த காயம் ஏற்பட்டது. எனது உடலில் காயம் ஏற்பட்டது. தடுக்க வந்த எனது மகன் சத்யாவை எதிரிகள் நான்கு பேரும் கட்டையால் அடித்தார்கள். எங்களுக்கு ஏற்பட்ட காயத்திற்காக திருவாரூர் அரசு மருத்துவமணைக்கு சிகிச்சைக்காக சென்றோம். என்னிடத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் **அ.த.சா.ஆ. 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் **தரப்பில் குறுக்கு விசாரணை :**

என்னை அடித்தால் எனக்கு மயக்கம் ஏற்படவில்லை என்றால் சரிதான். நான் மருத்துவமணையில் இருந்தபோது எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் ஒரு கையொப்பம் தான் செய்தேன். நான் கையொப்பம் செய்ததில் எழுதியிருந்த விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் கையொப்பம் பெற்ற போது மாலை சுமார் 5.30 மணி இருக்கும். நான் காவல் நிலையம் சென்றேனா என்றால் இல்லை. என்னிடம் பெண் போலிசார் கையொப்பம் வாங்கினார்கள். எதிரி சுசீலா எனது அண்ணன் மனைவி மற்ற இரண்டு பெண் எதிரிகளும் அவரது மகள்கள். வேலி பிரச்சனை தான் முன் விரோதம் என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 99 /2020 |
| Deposition of witness | : | PW-2 |
| Name | : | சத்யா |
| Father's /Husband Name | : | கந்தசாமி |
| Village | : | ஆண்டார்பந்தி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 36 |
| Occupation | : | இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 19th day September 2024.
Accused A1 to A4 present.

**முதல் விசாரணை:–**

அ.சா.1 எனது தாயார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும், கடந்த 23.01.2019 ம் தேதி காலை 9.30 மணிக்கு நான் எனது தாயார் வீட்டில் இருந்தபோது ஆஜர் எதிரிகள் 4 பேரும் எங்கள் வீட்டு வாசலுக்கு வந்து எனது தாயாரை பார்த்து குச்சிக்காரி மவனே என அசிங்கமாக திட்டினார்கள், அப்போது வெளியே வந்து நான் பார்த்த போது அ.சா.1 புஷ்பவள்ளியை எதிரிகள் நான்கு பேரும் கல்லாலும் கட்டையாலும் அடித்தார்கள்.தடுத்த எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது. எனது தாயாருக்கும் தலையில் காயம் ஏற்பட்டது. எங்களுக்கு ஏற்பட்ட காயத்திற்காக திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். அ.சா.1 கொடுத்த புகிரான் பேரில் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் **தரப்பில் குறுக்கு விசாரணை :**

சண்டைக்கு காரணம் வேலி பிரச்சனை. போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் வாங்கினார்கள். அதில் எதிரிகள் கல்லால் அடித்த விவரத்தை கூறினேனா என்றால் கூறினேன். எனக்கு எனது மகனுக்கும் காயம் ஏற்பட்டது. எனது மகனுக்கு காயம் ஏற்பட்ட விவரத்தை கூறினேனா என்றால் இல்லை. என்னை ஒரு பெண் போலிசார் விசாரித்தார். நான் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். மருத்துவரிடம் 4 நபர்கள் அடித்ததாக கூறினேன். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எனது காயத்திற்கும் எதிரிகளுக்கும் காயமில்லை என்றால் சரியல்ல.

(ஒம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.